# பூமியில் குமாரனுடைய தெய்வீகத்தை வேதாகமச் சொற்றொடர்கள் பிரதிபலிக்கின்றன

*தேவன் மனித இனத்தைப் படைத்த பிறகு, ஒரு குறிப்பிட்ட வேளையில் ஏதோ ஒரு கோரமான தவறுண்டாயிற்று. மனிதன் - ஆணும் பெண்ணும் சுய விருப்பப் பாதையொன்றைத் தேர்ந்து கொண்டு, தேவனுடைய பாதுகாக்கும் எச்சரிக்கைகளை மதிக்காது விட்டனர். இந்தப் பாவத்திற்கு அவர்கள் தேவனுடன் கொண்டிருந்த ஐக்கியத்தை விலையாகக் கொடுக்க வேண்டியதாயிற்று, மற்றும் இது மரணத்தின் பயங்கரத்தைக் கொண்டு வந்தது. தேவன் மற்றும் ஆதாம் ஏவாள் ஆகியோருக்கிடையிலான பெரும் பிளவானது ஆழமும் அகலமும் உடையதாயிற்று. விளைவுகள் தொலை தூரத்தையடைந்தன; அவை நம்மையும் கூடப் பாதிக்கின்றன. எண்ணெய் தோண்டும் கிணறுகளில் பயன்படும் சங்கிலியின் ஒவ்வொரு கண்ணியும் எண்ணெயினால் தடவப்பட்டிருப்பது போல, மனித வரலாற்றில் ஒவ்வொரு தலைமுறையும் இணைக்கப்பட்டு, பாவத்தினால் கறைப்பட்டது. இது மாற்றியமைக்கப்பட்டிராதிருந்தால் மனித இனம் மரணத்தினால் அழிந்திருக்கும் (ரோமர் 5:12). நாம் இவ்வுலகில் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, எவ்வித நம்பிக்கையுமின்றி விடப்பட்டிருந்தோம் (எபே. 2:12). தேவன் நமக்காகச் செயல் பட்டிராதிருந்தால் நாம் யாவரும் இழக்கப்பட்டிருப்போம்.*

*அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றின் நம்புவதற்குரிய செயல் விளக்கமாக, தேவன் இப்பூமிக்கு ஒரு நபராக வந்தார்! அவர் அப்பெரும் பள்ளத்தைக் கடந்தார். அவர் பாலத்தைக் கட்டினார். உயரம், ஆழம், அகலம் அல்லது நீளத்தைக் காண முடியாத அன்பினால் அவர் செயல்பட்டார். அவர் செய்தது எதிர்பாராததாகவே இருந்தது; அது தகுதியற்றவர்களுக்குச் செய்யப்பட்டதாய் இருந்தது. என்ன ஒரு மகிமையுள்ள, மகிழ்ச்சி நிறைந்த, ஊக்கமூட்டும் நற்செய்தி! இதற்கு மாறாக, இதைத் தப்பிதமாக புரிந்து கொள்வது எவ்வளவு சுலபமாக இருக்கிறது! தேவன் நமக்குச் செய்திருப்பதைப் பற்றிய நமது புரிந்து கொள்ளுதலை ஆழப்படுத்தி, அதைப்பற்றிய நமது மதிப்பை உயர்த்துவதே இப்பாடத்தின்*

குறிப்பிட்ட இலக்காகும்.

பழைய ஏற்பாட்டில் பல வாக்குத்தத்தங்களும், தீர்க்கதரிசனங்களும் தேவனுடைய மேசியாவின் வருகையைப் பற்றியவைகளேயாகும். இவைகளின் வளர்ச்சி உச்ச நிலை இயேசுவின் வருகையில் காணப் படுகின்றது. யோவானின் எழுத்துக்களுடன் புதிய ஏற்பாடு நிறைவுற்றிருந்த வேளையில், இயேசு தேவனுடைய குமாரன் மட்டும் அல்ல. அவர் குமார னாகிய தேவனுமாவார் என்பது சபைக்கும் இந்த உலகத்திற்கும் வெளிப்படுத்தப்பட்டது (யோவா. 1:1-14; 20:26-31).

## "தேவனுடைய குமாரன்"

''தேவனுடைய குமாரன்'' என்ற சொற்றொடரானது அதனுடன் பழைய ஏற்பாட்டில் அல்லது புதிய ஏற்பாட்டில் தெய்வீகத்துவக் கருத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. இஸ்ரவேலர்களுக்கு மோசே, "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய பிள்ளைகள்" என்று கூறினார். இஸ்ரவேலர்கள், ''தேவனுடைய புத்திரர்கள்'' என்று அழைக்கப்பட்டிருந்தாலும் கூட தாங்கள் தெய்வீகமானவர்கள் அல்ல என்று அறிந்திருந்தார்கள். புதிய ஏற்பாட்டில் இயேசு, "சமாதானம் பண்ணு கிறவர்கள் ... தேவனுடைய புத்திரர்" என்னப்படுவார்கள் (மத். 5:9) என்று கூறுவதை நாம் காண்கின்றோம். இயேசுவின் கூற்றிலிருந்து எவரொருவரும், சமாதானம் பண்ணுகின்றவர் தெய்வீகத்துமானவர் என்று கருதுவதில்லை. இப்படிப்பட்ட பல உதாரணங்களில், "தேவனுடைய புத்திரர்(கள்)" என்ற சொற்றொடரானது தெய்வீகத்துவத்தின் அர்த்தத்தை பழைய ஏற்பாட்டிலோ அல்லது புதிய ஏற்பாட்டிலோ பெற்றிருப்பதில்லை என்று நாம் காண்கின்றோம். இது இயேசுவுக்குப் பயன்படுத்தப்படும் போதுதான் ஒரே விதிவிலக்காக - மிகப் பெரும் விளக்கமாக - அமைகின்றது.

இவ்விடத்திலும் கூட, இயேசுவின் வாழ் நாட்களின் போது இந்த விளக்கத்தைப் பயன்படுத்திய பலர், தங்கள் சிந்தையில் தெய்வீகத்துவத்தின் கருத்தைப் பெற்றிருந்திருக்கவில்லை என்பதை நாம் அறிய வேண்டும். இஸ்ரவேலர்கள் தங்களின் வரலாறானது தேவனுடைய மேசியாக்களாக இருந்த தனி நபர்களினால் அடையாளப் படுத்தப்பட்டிருந்ததை அறிந்தார் கள். "மேசியா" என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்டவர் அல்லது தெரிந்து கொள்ளப்பட்டவர்" என்று அர்த்தப்படுகின்றது. தேவன் தமது மக்களை வழிநடத்திப் பாதுகாப்பதற்குப் பல தலைவர்களையும் அரசர்களை அபிஷேகம் செய்திருந்தார். சில வேளைகளில் அவர்கள் "தேவனுடைய புத்திரர்கள்" என்று அழைக்கப்பட்டனர் (சங். 89:20-29; 2 சாமு. 7:11ஆ-16). உண்மையில், இஸ்ரவேல் தேசத்தார் முழுமையும், யாத். 4:22 மற்றும் ஓசியா 11:1ன் படி தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டனர்.

இவ்விதமாக, எபிரெய/இஸ்ரேலய/யூதர்களின் மனதில் ''தேவனு டைய குமாரன்" என்ற சொற்றொடரானது ஆழமான தனிக் குறிப்பைப் பெற்றிருந்தது. இஸ்ரவேலர்கள் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின மாய் இருந்தார்கள். அவர்கள் அவரது குடும்பத்தின் உறுப்பினர்களாய்

*இருந்தார்கள். அவர்கள் அவரது சித்தத்தைப் பெறுபவர்களாயும் அதினால் பயனடைபவர்களாயும் இருந்தார்கள். "தேவனுடைய குமாரன்" என்ற வகையில் இஸ்ரவேலர்கள் மதிப்புமிக்கதொரு வம்சா வழியினைப் பெற்றிருந்தார்கள். ''தேவனுடைய புத்திரர்கள்'' என்ற வகையில் அவர்களின் தலைவர்களும் அரசர்களும் யேகோவாவால் விசேஷமாய் நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டார்கள்.*

*யோவான் ஸ்நானன் தமது ஊழியத்தைத் தொடங்கிய பொழுது, தாம் மேசியா அல்ல என்பதை மத அதிகாரிகளுக்கு விரைவில் சுட்டிக் காட்டினார். மாறாக அவர் மேசியாவுக்கான வழியை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். யோவான் இயேசுவை ஒருபோதும் மேசியா என்று அழைத்ததில்லை, ஆனால் தமக்குப் பின்வருகின்றவர் - உண்மையில் தமக்கு முன்பாகவே இருந்தவர் - அவரே என்று வலியுறுத்தினார், மேலும் தம்மை விட அவர் பெரியவர் என்றும் வலியுறுத்தினார். அவரது கூற்றுக்கள் இயேசுவின் மேசியாத்துவத்தை மறைமுகமாய்க் குறிப்பிட்டு, அவருடைய கர்த்தத்துவத்தையும் உறுதிப்படுத்தின (மத். 3:1-3; யோவா. 1:15, 19-23, 30).*

## *"ராஜா"*

*ஆகையால், இயேசு ஞானஸ்நானம் பெற்ற பிறகு, அவர் தம் ஊழியத்தைச் செய்யத் தொடங்கிய போது, அவரது சம காலத்திய யூதர்கள் பலரால் அவர் அரசத்துவச் சொற்றொடர்களில் அடிக்கடி குறிப்பிடப் பட்டதில் வியப்பெதுவும் இல்லை. அவரை மாபெரும் தீர்க்கதரிசி என்று விசுவாசித்த சிலர், அவரைத் தங்களின் ராஜாவாக்கிக் கொள்ள விரும்பினார்கள் (யோவா. 6:14, 15). மற்றவர்கள், ''கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், ..." (லூக். 19:38; சங். 118:26ஐயும் காணவும்) என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறினார்கள்.*

*புறஜாதியார் சிலரும் கூட, இயேசுவின் வாழ்வு மற்றும் ஊழியம் ஆகியவற்றைச் சூழ்ந்திருந்த ராஜத்துவ வாசனையை அறிந்திருந்தார்கள். அவர் பிறந்த வேளையில், பெர்ஸியா அல்லது அரபியாவில் இருந்து வந்து புறஜாதியார் என்று யூகிக்கப்படும் கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் "யூதர்களின் ராஜாவாக"ப் பிறந்தவரை(மத். 2:1, 2)த் தேடி வந்தார்கள். இயேசுவின் வாழ்க்கை முடிவின் அண்மையில், ரோம ஆளுநராகிய பிலாத்து, இயேசுவின் புகழைப் பற்றியும், அவர் தம்மையே மேசியா, ராஜா மற்றும் தேவனுடைய குமாரன் என்று ஒப்புக் கொண்டது பற்றியும் குறிப்பாகக் கவலையடைந்தார் (மத். 26:63, 64; யோவா. 18:37). இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்த வேளையில், "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா'' என்ற மேல் விலாசத்தைச் சிலுவையின் மீது வைக்கும்படி பிலாத்து கட்டளையிட்டார் (யோவா. 19:19).*

## *"மேசியா"*

*இயேசு தமது வாழ்வுக் காலத்தில், புறஜாதியார் சிலராலும், யூதர்கள் பலராலும் தேவனால் அபிஷேகம் செய்யப்பட்ட ராஜா மற்றும் குமாரன் -*

*‘‘மேசியா’’ என்ற வகையில் நோக்கப்பட்டார். இயேசு தாமே இந்த நிலையை ஏற்றுக் கொண்டு, மற்றவர்கள் தம்மைப் பற்றிக் குறிப்பிட்ட இப்பணித்துவத்தையும் அவர் ஒப்புக் கொண்டார் (மத். 16:16; யோவா. 1:49). இருப்பினும், யோவான் ஸ்நானன் ஒருபோதும் இயேசுவை மேசியா என்று அழைத்திராதிருந்தது போலவே, இயேசுவும் தமது ஊழியத்தின் போது தம்மை மேசியா என்று அடையாளப்படுத்திக் கொள்வதில் விருப்பம் இல்லாதவரைப் போல காணப்பட்டார். இது ஒருவேளை தொடர்ந்து செய்ய வேண்டியதாய் இருந்த ஊழியத்திற்கு அவரே ஏற்படுத்திக் கொண்டிருந்த ‘‘கால அட்டவணையின்’’ நிமித்தமாக இருந்திருக்கலாம் (மத். 16:20; 26:18; யோவா. 2:4; 7:6; 8:20; 17:1, 2) அல்லது யூதமக்கள் தங்கள் முன்னுரைத்தலின்படியான மேசியாவைப் பற்றிய பல தவறான கருத்துக்களை அவருக்கு நடைமுறைப்படுத்துவதில் இருந்து தவிர்ப்பதற் காக செய்யப் பட்டிருந்திருக்கலாம். இது நிச்சயமாகவே அவர் “மேசியாத்துவ உணர்வு” இல்லாதிருந்ததால் ஏற்பட்டது அல்ல.* (John Bright, *The Kingdom of God என்ற நூலில் இருந்து).*

*இயேசுவை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்கள், அவைகளைப் பயன்படுத்தியவர்கள் இயேசுவைத் தேவன் என்று நினைத்தார்கள் என்று அர்த்தப்படுத்த அவசியமில்லை. உண்மையில், இயேசுவிடமிருந்து வந்ததைத் தவிர, இயேசு தெய்வீகமானவர் என்ற உரிமையுள்ள அறிக்கைகள் அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிறகே உண்டாயின, “சந்தேகத்” தோமா இயேசுவின் பரிசுத்த சரீரத்தைக் கண்ட பொழுது, “என் ஆண்டவரே! என் தேவனே!” என்று கூறினார் (யோவா. 20:28). உச்சக்காட்சி வந்திருந்தது. உயிர்த்தெழுதலின் வெற்றி திட்டவட்டமானதாய் இருந்தது. இயேசுவின் முழு அடையாளம் இப்பொழுது உறுதிப்படுத்தப்பட்டதாயிற்று. இயேசு தேவனாகவே (தெய்வீகத்துவமானவராகவே) இருக்கின்றார்!*